# பிள்ளையை முன்பள்ளிக்கு அல்லது பகல் பராமரிப்பு நிலையத்திற்கு அழைத்துச் செல்கின்ற பெற்றோர்/பாதுகாவலருக்கான செய்தி

## கொவிட் 19 இற்கு எதிரான புதிய வாழ்க்கைப் பாணி
## பிள்ளைக்குப் பாதுகாப்பான முன்பள்ளி வாழ்க்கை

பிள்ளையின் பெயர் : ____________________

முன்பள்ளியின் பெயர் : ____________________

ஆசிரியரின் பெயர் : ____________________

ஆசிரியரின் தொலைபேசி இலக்கம் : ____________________



**சுகாதார மேம்பாட்டு பணியகம்**
சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சு

**சிறுவர் செயலகம்**
மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்ச

World Health Organization
Sri Lanka

unicef
for every child
සෑම දරුවෙක් වෙනුවෙන්ම
ஒவ்வொரு சிறுவர்களுக்காகவும்

"கொவிட் 19" நோய்த் தொற்று பரவலைத் தடுப்பதற்கான விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் முன்பள்ளி / பகல் பராமரிப்பு நிலையங்களை மீண்டும் திறப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

பிள்ளை, முன்பள்ளி / பகல் பராமரிப்பு நிலையங்களில் காலத்தைக் கழிக்கின்றபோது பிள்ளைக்குப் பாதுகாப்பான சூழலொன்றை அமைத்துக் கொடுத்தல் இதன் நோக்கமாகும்.

சகல சந்தர்ப்பங்களின்போதும் "கொவிட் 19" நோய்த் தொற்று பரவலைத் தடுப்பதற்காக பின்பற்றவேண்டிய வழிமுறைகள் பற்றி நினைவில் வைத்திருக்கவும். முன்பள்ளியினுள் இந்த செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்காக ஆசிரியருக்கு உதவுங்கள்.



சவர்க்காரமிட்டு முறைப்படி கை கழுவுதல்



இருமும்போதும், தும்மும்போதும் சரியான முறையில் வாயையும் மூக்கையும் மூடிக்கொள்ளல்




ஒருவருக்கொருவர் 1 - 2 மீற்றர் இடைவெளியினை பேணுதல்

இவ்வாற்றல்களைப் பிள்ளைகளிடையே வளர்க்க உதவுங்கள்

## முன்பள்ளிக்கு / பகல் பராமரிப்பு நிலையத்திற்கு பிள்ளையை அழைத்துச் செல்கின்றபோது கவனத்திற்கொள்ளவேண்டிய விடயங்கள்

- உங்களுடைய பிள்ளைக்கு அல்லது வீட்டில் உள்ள ஒருவருக்கு காய்ச்சல், தடிமல், இருமல் இருப்பின் பிள்ளையை முன்பள்ளிக்கு/ பகல் பராமரிப்பு நிலையத்திற்கு அழைத்துச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளவும்
- உங்களுடைய பிள்ளை நாட்பட்ட நோய் ஒன்றிற்கு சிகிச்சை பெறுவதாயின், முன்பள்ளிக்கு அனுப்புவதற்கு முன்னர் வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவும்
- இலகுவாக கழுவக்கூடிய ஆடையொன்றை பிள்ளைக்கு அணிவிக்கவும் (சீருடை கட்டாயமில்லை)
- வீட்டில் சமைத்த உணவு அடங்கிய சாப்பாட்டுப் பெட்டி, குடிநீர் போத்தலுடன் பிள்ளையை முன்பள்ளிக்கு அனுப்பிவைக்கவும்
- முன்பள்ளியில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்படி உரிய நாட்களில் மாத்திரம் குறித்த நேரங்களில் பிள்ளையை முன்பள்ளிக்கு அழைத்துச் செல்லவும்
- உரிய நேரத்திற்கு திரும்ப அழைத்துச் செல்ல வரவும் (பிள்ளையை அழைத்துச் செல்ல சந்தர்ப்பம் கிடைக்கும் வரை முன்பள்ளியின் நுழைவாயில் அருகில் குழுவாக காத்திருப்பதில் இருந்து தவிர்ந்து கொள்ளவும்)
- முன்பள்ளிக்கு அழைத்துச் செல்வதற்கு முன்னர் அங்கு தற்பொழுது இருக்கின்ற மாற்றங்களைப் பற்றி பிள்ளைக்குச் சொல்லிக் கொடுக்கவும்



- அடிக்கடி சவர்க்காரமிட்டு கை கழுவ வேண்டும் என்பது பற்றி
- கண்கள், மூக்கு, வாய் மற்றும் முகம் போன்றவற்றைத் தொடுவதைத் தவிர்ந்து கொள்ளும்படி
- விளையாடும்போது நண்பர்களைத் தொடாமல் விளையாட வேண்டும் என்பது பற்றி
- வழமைபோல் வகுப்பில் எல்லா நண்பர்களும் இல்லை என்பது பற்றி
- ஆசிரியர் முகக் கவசம் அணிந்திருப்பார் என்பது பற்றி

**வீடு திரும்பிய பின், குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்களுடன் பழகுவதற்கு முன்னர் நீங்களும், பிள்ளையும்,**

- சவர்க்காரமிட்டு, ஓடும் நீரில் 20 வினாடிகள் கைகளைக் கழுவுங்கள்
- பாதணிகளை வீட்டுக்கு வெளியில் கழற்றி வையுங்கள்
- உங்களுடைய மற்றும் பிள்ளையின் ஆடைகளை தனியாக சவர்க்காரமிட்டு கழுவுங்கள்
- நீங்களும் பிள்ளையும் குளித்து உங்களைச் சுத்தப்படுத்திக்கொள்ளுங்கள்
- பாடசாலை புத்தகப் பையை சவர்க்கார நீரில் ஊறவிட்ட துணியால் சுத்தமாக்குங்கள்

**நினைவில் வைத்திருக்கவேண்டிய தொலைபேசி இலக்கங்கள் சில**

சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகம் - ..............................

பொதுச் சுகாதார பரிசோதகர் - ..............................

குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் - ..............................

சுகாதார பிரச்சினைகளை விசாரிப்பதற்காக சுவசரிய தொலைபேசிச் சேவை - 1999



குறிப்புகள்

..............................

..............................

..............................

..............................

..............................